## (ஆ) இயற்கைச் சீற்றம், விபத்துகள் மற்றும் மின்சாரத் தாக்குதல், தீ விபத்து ஆகியவற்றின் காரணமாக பல்வேறு தொகுதிகளில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பல்வேறு தொகுதிகளில் இயற்கைச் சீற்றம், விபத்துகள், மின்சாரம் தாக்கியது போன்றவற்றால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்க வேண்டும் என்று விதி 55–ன்கீழ், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்பிரமணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி ஆகியோர் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக நான் எடுத்துக்கொள்கிறேன். அனைவரும் தங்களுடைய தொகுதியில் உயிரிழந்தவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சருடைய பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவி வழங்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். நேரத்தின் அருமை கருதி, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது கோரிக்கைகளை பேரவையிலே முன்வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்ததாகக் கருதி, அதற்கு உரிய நிவாரண உதவி வழங்குகிற அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அழைக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவையாறு மேற்கு கிராமத்தைச் சேர்ந்த சித்தன் என்பவரின் மகன் திரு. முருகன் என்பவர், 31–5–2018 அன்று கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, கட்டட விபத்தில் சிக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு,*

*2018 ஜூன் 14*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

*திரு. முருகன் அவர்களுடைய குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, சு. கீரனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சந்திரசேகர் என்பவரின் மகள் செல்வி மகாலட்சுமி என்பவர், 7–6–2018 அன்று பள்ளிக் கழிவறையிலிருந்து மயங்கிய நிலையில் மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு, செல்வி மகாலட்சுமியின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*தருமபுரி மாவட்டம், கிருஷ்ணபுரம் உள்வட்டம், திப்பிரெட்டிஅள்ளி தரப்பு குக்கல்மலை கிராமத்தில் 3–6–2018 அன்று திடீரென இடியுடன்கூடிய மழை பெய்தபோது, இடி தாக்கியதில் திரு. ராதாகிருஷ்ணன் என்பவரின் மகள் செல்வி வித்யா என்பவர் உயிரிழந்த செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு, இயற்கைப் பேரிடரால் உயிரிழந்த காரணத்தினால் தற்போதைய நடைமுறைகளின்படி செல்வி வித்யாவின் குடும்பத்திற்கு நான்கு இலட்சம் ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*முற்பகல் 11–50*

*பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், மாவலிங்கை கிராமத்தைச் சேர்ந்த திரு. சக்திவேல் என்பவரின் மகன் செல்வன் பூபதி மற்றும் திரு. முருகேசன் என்பவரின் மகன் செல்வன் பாரதி ஆகிய இருவரும் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு, உயிரிழந்த பூபதி மற்றும் பாரதி ஆகியோரின் குடும்பத்திற்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், புஞ்சை புளியம்பட்டி உள்வட்டம், நல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள ஏரியில் 31–5–2018 அன்று குளிக்கச் சென்ற மாதம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரகுபதி என்பவரின் மகன் ராஜ்குமார், திரு. சுரேஷ் என்பவரின் மகன் கௌதம் மற்றும் திரு. செல்வன் என்பவரின் மகன் சஞ்சய் ஆகிய மூன்று மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு, அக்குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், சேனங்கோடு, திற்பரப்பு கிராமத்தைச் சேர்ந்த திரு. நெல்லையப்பன் என்பவர் மரத்தை வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்தபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனையடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு, அவரது குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், குமாரபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. துரைராஜ் என்பவர் 9–6–2018 அன்று வீசிய பலத்த காற்று மற்றும் மழையினால், மின் கம்பி அறுந்து விழுந்து, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்; விளவங்கோடு வட்டம், அருமனை கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலஸ் என்பவரின் மகன் திரு. அகஸ்டின் என்பவர் 10–6–2018 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, பலத்த காற்றினால் மரம் முறிந்து, மின்கம்பி அறுந்து விழுந்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்; ஆறுதேசம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கொச்சப்பி என்பவரின் மகன் திரு. பாலையன் என்பவர் 10–6–2018 அன்று பலத்த காற்று மழையினால், அறுந்து கிடந்த மின்கம்பியை கவனிக்காமல் மிதித்ததால், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இச்சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும்

2018 ஜூன் 14] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தெரிவித்துக்கொண்டு, உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு தற்போதைய நடைமுறைகளின்படி, தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், தேவையூர் தெற்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. உளியன் என்பவரின் மகன் செல்வராஜ் என்பவர் 10–6–2018 அன்று, இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, முன்னால் சென்று கொண்டிருந்த லாரி மின் கம்பம்மீது உரசி, மின் கம்பம் சாய்ந்து விழுந்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு, அன்னாரின் குடும்பத்திற்கு தற்போதைய நடைமுறைகளின்படி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், வரகூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்வம் என்பவரின் கூரை வீடு மின் கசிவின் காரணமாகத் தீப்பற்றி எரிந்ததில், அவருடைய மகள் செல்வி. கீர்த்தி என்பவர் தீ விபத்தில் சிக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன். இவருடைய குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு, அன்னாரின் குடும்பத்திற்கு தற்போதைய நடைமுறைகளின்படி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், அனவயல் கிராமத்தைச் சேர்ந்த திரு. விநாயகம் என்பவரின் மகன் திரு. தமிழ்செல்வன் என்பவர் அவரது தோட்டத்தில் உள்ள மரத்தில் ஏறும்போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன். இவருடைய குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 14

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆமூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நாராயணசாமி ரெட்டி என்பவரின் மகன் திரு. கண்ணியப்பன் என்பவர் 9–6–2018 அன்று அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு, அன்னாரின் குடும்பத்திற்கு தற்போதைய நடைமுறைகளின்படி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 3 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

## 4. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

### (ஆ) நீட் தேர்வில் தோல்வியடைந்து தற்கொலை செய்து கொண்ட மாணவி சுபஸ்ரீ குடும்பத்திற்கு அரசின் சார்பில் நிதியுதவி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நிவாரணம் வழங்குவதில் என்ன இருக்கிறது? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

*முற்பகல் 11-55*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நிவாரணம் வழங்கப்படக்கூடிய அந்தப் பட்டியலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்திருக்கின்றார்கள். நான் ஒன்றை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, ஏற்கெனவே, நீட் தேர்விலே தோல்வியடைந்து, மனமுடைந்து தற்கொலை செய்துகொண்ட அரியலூர் பகுதியைச் சேர்ந்த அனிதா என்ற அந்த மாணவிக்கு அரசின் சார்பிலே நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல, விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த பிரதிபா என்கிற அந்த மாணவிக்கும் நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சுபஸ்ரீ என்கிற மாணவி ஒரு வார காலத்திற்கு முன்பு, நீட் தேர்வில் தோல்வி அடைந்த காரணத்தினால், அவரும் மனமுடைந்து தற்கொலை செய்துகொண்டிருக்கிறார். ஆனால், அவருக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில்*